©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 7] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 14, 2018
மாசி 2, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 7, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 22 ஜனவரி 2018.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை)**
**ஆணை புது டில்லி, 27–12–2017.**

**S.O. 4079 (E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்குதல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது. அதாவது:–

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்:–**இந்த ஆணை 2017–ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் (ஏழாவது திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்.

**2.** 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த (2) உட்பகுதியின், (iv) ஆம் இனத்தில் “31–12–2017“ என்கிற எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்களுக்குப் பதிலாக, “31–03–2018“ என்கிற எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

[F. No. S-10/3/2017-ECR&E]

**எ.கெ.சௌதிரி,**
*பொருளியல் ஆலோசகர்.*

***குறிப்பு:*** முதன்மை ஆணை மத்திய அரசின் அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், பாகம் II பிரிவு **3**, உட்பிரிவு (i) இல் வெளியிடப்பட்டுள்ளது

(காண்க: **–** G.S.R**. 929** (E) 29-09-2016), பின்னர் திருத்தப்பட்டவை **27–10–2016** ஆம் நாளிட்ட S.O.**3341** (E) 25-04-2017 ஆம் நாளிட்ட S.O.**1288** (E) **17–05–2017** ஆம் நாளிட்ட S.O.**1600** (E) **25–08–2017** ஆம் நாளிட்ட S.O.**2785** (E) **27–09–2017** ஆம் நாளிட்ட S.O.**3136** (E) **23–10–2017** ஆம் நாளிட்ட S.O.**3397** (E) மற்றும் **25–10–2017** ஆம் நாளிட்ட S.O.**3422** (E) ஆகியவற்றில் காண்க.)

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.